Under Section 173 BNSS

B. [signature] 20.08.24

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165154

1. District மாவட்டம் : விழுப்புரம் PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year ஆண்டு: 2024 FIR No. மு.த.அ. எண்: 06 Date நாள்: 20.08.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: Sec. 7
   (ii) Act சட்டம்: Act - 1988 Amended ACT - 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் : 13.08.2024 Date to நாள் வரை : 19.08.2024
   Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.08.2024 Time நேரம் : 15.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : 16.30

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 20km தென் மேற்கில்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திருவெண்ணெய் நல்லூர் பேரூராட்சி அலுவலகம், திருவெண்ணெய் நல்லூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. சேட்டு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அந்தி லெக்ஷ்மணன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ரியல் எஸ்டேட் தொழில் (g) Address : முகவரி 153/3, மேட்டுத்தெரு, சாலாமேடு, விழுப்புரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருவெண்ணெய் நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. முருகன்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - வாதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Cetty

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 20.08.24.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

N. A.ஸ்வாமி
Name: பெயர் .............................
Rank: நிலை .....................No. எண் .........
காவல் ஆய்வாளர்,
உணவுக் [illegible] மற்றும் கண்காணிப்பு [illegible]
[illegible].

**Submitted:** On 20.08.2024 at about 15.00 hrs, while I was in my office, one Tr.A.Settu S/o AdhimoolaGounder, No.153, Mettu Theru, Salamedu, Villupuram, approached my detachment office and lodged a written complaint which read as follows:- அனுப்புநர்:A.சேட்டு, த/பெ.ஆதிமூலகவுண்டர், 153/3,மேட்டு தெரு,சாலாமேடு, விழுப்புரம். பெறுநர்:காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,விழுப்புரம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு அமுதா என்பவருடன் திருமணமாகி மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். திருவெண்ணைநல்லூர், மகாத்மா காந்தி தெருவில், கதவு எண்.5 இல்லத்தில் வசிக்கும் கோபாலகிருஷ்ணன் மகன் புண்ணியக்கோடி மற்றும் அவரது மனைவி திருமதி. புஷ்பவள்ளி ஆகியோர்களுக்கு திருவெண்ணைநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள்-489/2024 மற்றும் 873/2024-ன்படி கிடைக்கப்பெற்ற சொத்துக்களை, அரசின் உரிய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மனை வரன்முறைபடுத்தப்பட்டு, திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரமும் வழங்கப்பட்டு **"ஓம் சக்தி நகர்"** என்ற பெயரில், **மனை எண்கள் 1 முதல் 31 வரையில்** மொத்தம் 31 மனைகளைக்கொண்ட மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அம்மனை பிரிவுகளில் மேற்படி புண்ணியக்கோடியும் அவரது மனைவி திருமதி.புஷ்பவள்ளியும் சேர்ந்து மனை எண்கள்1,2,3,4,6,7,23,24,25,27,28,29,30,31 ஆகிய 14 மனைகளை விற்றுவிட்டனர். மனை எண்.26-னை அவர்களுக்கென நிறுத்தி வைத்துக்கொண்டனர். மீதமுள்ள 16 மனைகளை விற்பனை செய்வதற்கு எனது மூத்த மகள் ராஜேஸ்வரியின் மகன் வினோத்திற்கு கடந்த 24.06.2024-ம் தேதி திருவெண்ணைநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 2205/2024-ன்படி பொது அதிகாரப் பத்திரம் (பவர் ஆப் அட்டர்னி) மூலம் அதிகாரம் அளித்துள்ளனர். மேற்படி அதிகாரம் அளிக்கப்பட்ட 16 மனைகளில் 07 மனைகளை ஏற்கனவே எனது பேரன் விற்பனை செய்துவிட்டார். மீதமுள்ள 09 மனைகளை பத்திர பதிவு செய்து தர வேண்டி கடந்த 09.8.2024-ம் தேதி திருவெண்ணைநல்லூர் சார்பதிவாளர் அலவலகம் சென்றபோது, மேற்படி மன்னைகள் அடங்கிய சர்வே எண்கள்.346/1A,346/1C, 346/4B1A மற்றும் 495/1B1A, 495/1B2A-ல் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவில்லை என்றும் மறு கடிதம் வரும் வரை பத்திர பதிவினை நிறுத்தி வைக்கவேண்டும் என குறிப்பிட்டு திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் திருவெண்ணைநல்லூர் சார் பதிவாளருக்கு 06.08.2024-ம் தேதியிட்டு ஒரு கடிதம் அனுப்பி இருப்பது பற்றி தெரியவந்தததது. இது சம்மந்தமாக நான்

13.08.2024-ஆம் தேதி திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் முருகன் என்பவரை நானும் எனது பேரன் வினோத்தும் சென்று பார்த்து ஏற்கனவே அரசினால் உரிய நடைமுறைகளை பின்பற்றி மனை வரன்முறை படுத்தப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அடிப்படை வசதிகள் செய்வதற்கான கட்டணம் மற்றும் டெபாசிட் தொகை செலுத்தப்பட்டுவிட்டது. பிறகு ஏன் சார் பத்திர பதிவினை நிறுத்தி வைக்க கடிதம் அனுப்புனிங்க என்று கேட்டோம். அதற்கு அவர் அரசாங்க கட்டணம் எல்லாம் ஏற்கனவே கட்டிட்டீங்க ஆனா எனக்கு ஏதும் லஞ்ச பணம் கொடுக்கலயே அதனாலதான் அப்படி கடிதம் அனுப்பினேன் என்றும், எனக்கு மூன்று லட்ச ரூபாய் லஞ்ச பணம் கொடுத்தால் மட்டுமே இனி நீங்க மனைகளை பத்திர பதிவு செய்ய முடியும் என்றும் சொல்லி. எனக்கு லஞ்ச பணம் கொடுத்தால்தான் உங்கள் மனைகளை பத்திர பதிவு செய்யலாம் என திருவெண்ணைநல்லூர் சார்பதிவாளருக்கு கடிதம் அனுப்புவேன் என்று சொன்னார். லஞ்ச பணத்தை எடுத்துகிட்டு திங்கட்கிழமை வந்து என்னை பாருங்கள் என்று சொன்னார். சரிங்க சார் என்று சொல்லிவிட்டு நாங்கள் வீட்டிற்கு வந்து விட்டோம். மீண்டும் நேற்று 19.08.2024-ஆம் தேதி திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் முருகன் என்பவரை நானும் எனது பேரன் வினோத்தும் சென்று பார்த்து மேற்படி விஷயம் சம்மந்தமாக கேட்ட போது நான் கேட்ட 3 லட்ச ரூபாய் லஞ்ச பணம் எடுத்து வந்தீங்களா என்று கேட்டார். அதற்கு நாங்கள் அவ்வளவு பணம் எங்களால புரட்ட முடியல சார் என்றும் பணத்தை குறைச்சி சொல்லுங்க சார் என்றும் கேட்டோம். அதற்கு அவர் உங்களுக்காக 1,20,000 குறைச்சிக்கறேன். நீங்க ரூ.1,80,000/- லஞ்ச பணம் கொடுத்தால் உங்கள் மனைகளை பத்திர பதிவு செய்யலாம் என திருவெண்ணைநல்லூர் சார்பதிவாளருக்கு கடிதம் அனுப்பிடுறேன் என்று சொன்னார். அதற்கு நாங்கள் பணத்தை ரெடி பண்ணிட்டு வந்து உங்களை பார்க்கிறேன் என்று சொல்லி வீட்டிற்கு வந்து விட்டோம். வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபோது திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் முருகன் என்பவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கும் எனது பேரன் வினோத்திற்கும் விருப்பம் இல்லை. எனவே எனது பேரன் வினோத் கல்லூரியில் படித்துக்கொண்டு இருப்பதால் அவன் சார்பில் என்னை லஞ்ச ஒழிப்புத்துறை புகார் அளிக்க சொன்னான். அதனால் நான் இன்று விழுப்புரம் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து நான் தயார் செய்து எடுத்து வந்திருந்த புகார் மனுவினை தங்களிடம் கொடுக்கின்றேன். எனவே, மனைகளை பத்திர பதிவு செய்யலாம் என திருவெண்ணைநல்லூர் சார்பதிவாளருக்கு கடிதம் அனுப்ப ரூ.1,80,000/- பணம் லஞ்சமாக கேட்கும் திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் முருகன் மீது உரிய

நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd XXXXXX (A.சேட்டு,) நாள்:20.08.2024.

Sir,

-Received the above written complaint on 20.08.2024 at about 15.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Villupuram Vigilance and Anti-Corruption Cr.No.06/2024/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 16.30 hrs today on 20.08.2024.

The original FIR along with a the original written complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

(N.Eswari) 20.08.24
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.